# பாசிசப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு ஒரு சவால்

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சென்னைக் கிளை தக்க நேரத்தில் மேற்கொண்ட துணிச்சலானதொரு நடவடிக்கை, ஈழ விடுதலை ஆதரவாளர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் பல சிறு குழுக்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி விட்டது. அவர்கள் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் என்பதைவிட புலிகளின் பாசிசத்துக்கு காலத்து வாங்குபவர்கள் என்பதுதான் உண்மையானதென்று நிரூபித்து விட்டது.


தன்னுரிமை இயக்கத்தை சேர்ந்த பல சிறு குழுக்கள் இணைந்து ஈழ விடுதலை ஆதரவாளர்கள் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. அதன் முதல் பொதுக்கூட்டம் ஜனவரி 7ந்தேதி சென்னையில் மத்திய நூலக கட்டட அரங்கில் நடந்தது. இந்திய ஆக்கிரமிப்பு மற்றும் சிங்கள இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஈழ விடுதலைக்குப் போராடி வரும் இயக்கங்களையும் கூட தடை செய்து, அதன் உறுப்பினர்களைக் கொன்று வருகிறது, விடுதலைப் புலிகளின் பாசிச அமைப்பு. அது இப்போது தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையின் உறுப்பினர்களைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளது; அவர்களின் கதி என்னவானது என்று தெரியவில்லை. புலிகளின் பாசிச நடவடிக்கையைக் கண்டித்தும் இந்தியப் புரட்சியாளர்களின் ஆதரவு கோரியும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை மற்றும் தமிழ் - சிங்கள மக்கள் நட்புறவுக் கழகம் ஆகியவற்றின் வேண்டுகோள் வந்துள்ளது.

புலிகளின் பாசிசப் போக்கை அம்பலப்படுத்த எண்ணிய சென்னை ம.க.இ.க. மேற்படி ஈழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பு பொதுக் கூட்டத்தில் அந்த வேண்டுகோளின் பிரதிகளையும், புதிய ஜனநாயகத்தையும் விநியோகிக்க அரங்கத்துக்கு வெளியே ''கடை''போட்டது. நமது நியாயமான நடவடிக்கையை அங்கு வந்த கணிசமான ஈழ விடுதலை ஆதரவாளர்கள் ஆதரித்தனர். ஆனால், கூட்டமைப்பின் தலைவர்களோ பொருமினர்; குட்டித் தலைவர்களோ ஆத்திரமடைந்தனர். தனித்தனியாகவும், கும்பலாகவும் வந்து ம.க.இ.க. தோழர்களை ஏசியும், மிரட்டியும் நயந்து பேசியும் விரட்டுவதற்கு முயன்றனர். ''மாற்றுக் கருத்து, விமர்சனங்கள் வைப்பது எங்கள் உரிமை. முடிந்தால், மேடையிலே போய் பதில் சொல்லுங்கள்'' என்று ம.க.இ.க.வினர் பதிலடி கொடுத்ததும் பின்வாங்கினர்.

இதற்கிடையே மேடையில் பேசி வந்த மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தின் தோழர் ஞானம் 'ஈழ விடுதலைப் போரை வர்க்க ரீதியில் பார்க்க வேண்டு'மெனப் பேச ஆரம்பித்தார். அவ்வளவுதான்! 'வர்க்கம் கிடையாது, இனம்தான்' என்று கூச்சல் போட்டு அவரைத் தொடர்ந்து பேச விடாமல் நிர்பந்தமாக இறக்கி விட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு கும்பல் ம.க.இ.க.வினரை நோக்கி வந்தது. ஏசியும், தாக்குவதற்கு முயன்றும் புதிய ஜனநாயகம் ஏடுகளை மிதித்தும் ரகளை செய்தனர். ஆனால், ம.க.இ.க. தோழர்கள் உறுதியாக நின்று மறுத்து பதிலடி கொடுத்தனர். வேறு வழியின்றி கூட்டமைப்புப் பிரமுகர்களே தமது சகபாடிகளை உள்ளே போகும்படி செய்தனர். புலிகளின் பிரதிநிதி ஒருவர், தி.க.வினர், எம்.சி.பி.ஐ பிரமுகர், இ.ம.மு. இன்குலாப், திலீபன் மன்ற தியாகு, அன்னைய ரணி சரசுவதி ராஜேந்திரன், தன்னுரிமை இயக்க பொழிலன் ஆகியோர் இந்த ''ரகளையிலும் - சமாதானத்திலும்'' முக்கியப் பங்காற்றினர்..

ஈழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பினர் புதிய ஜனநாயகத்தைக் கண்டு ஆத்திரமுற்றனர். ம.க.இ.க. தோழர்களை விரட்டவே முயன்றனரே தவிர அவர்கள் புலிகளின் பாசிசத்துக்கு எதிராக எழுப்பிய கேள்விகளுக்கு யாருமே பதில் சொல்லத் துணியவில்லை. ''ஆம்! வன்முறை சர்வாதிகாரிகள் (பாசிஸ்டுகள்)தான்! மாற்றுக் கருத்துக்கு இடமில்லை!'' என்று ஆத்திரத்தோடு ஒப்புக் கொண்டனர். இதன் மூலமும் ம.ஜ.இ.க. தோழரது வாயடைத்ததன் மூலமும் தமிழீழமும், தன்னுரிமைத் தமிழ்நாடும் இவர்கள் கையில் சிக்கினால் என்னவாகும் என்பதைக் காட்டி விட்டார்கள்.



# ஆர்.எம்.எஸ். ஊழியர் நியாயம்: அரசின் அடாவடித்தனம்

சென்னையில் உள்ள ரயில்வே அஞ்சல் சேவை (ஆர்.எம்.எஸ்) ஊழியர்களின் நான்கு நாள் வேலை நிறுத்தத்திலேயே 20 கோடித் தபால்கள் தேங்கி விட்டன. தபால் எடுத்துச் செல்லும் வாகன ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்பதால் ரயில்வே மற்றும் விமான நிலையங்களில் மலைமலையாகத் தபால் பைகள் குவிகின்றன. இந்த விவரங்களே போதும். இந்த ஊழியர்கள் இதுவரை எவ்வளவு கடுமையாக உழைக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கு. ஆனால், அரசோ அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்து எதிர் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

ஆர்.எம்.எஸ். அஞ்சல் பிரிப்பகத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக அற்பக் கூலிக்கு பல ஆயிரம் நிரந்தரமற்ற ஊழியர்கள் பணிபுரிகின்றனர். ஏற்கனவே 342 இடங்கள் காலியாக இருந்து அப்பணிகளில் ஊழியர்களை அமர்த்த மறுத்து வருகிறது நிர்வாகம். அதோடு கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துக் கடிதங்களைப் பிரிப்பதற்கு குறைந்த கூலி கொடுத்து ஓய்வு பெற்ற ஊழியர்களை அமர்த்தி சிறப்பு வேலை வாங்கியது. இதை எதிர்த்துத்தான் அஞ்சல் பிரிப்பக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

பொங்கல் விழாவை ஒட்டி பணிக்குத் திரும்ப வேண்டியது ஊழியரது கடமையெனக் கூறிப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தந்தது நிர்வாகம். ஆனால், ஊழியரது நியாயமான கோரிக்கையை ஏற்க மறுத்து ஓய்வு பெற்ற ஊழியர்கள், மாணவர்கள், குடும்பத் தலைவர்களை வைத்து அஞ்சல் பிரிப்பு வேலைகளைச் செய்ய முயன்றது. மற்ற பிரிவு அஞ்சல் துறை ஊழியர்களும், போராட்டத்தில் குதிப்பதாக எச்சரித்தும் அரசின் அடாவடித்தனம் நீடித்தது.

இயந்திர மயமாக்கியும் வேலைப் பளுவைக் கூட்டியும் நிரந்தர ஊழியர்களை வதைக்கும் அரசு, நிரந்தரமற்ற ஊழியர்களை பல ஆண்டுகளாகச் சுரண்டி வருகிறது. ஆனாலும், வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள சிரமங்களை தாமதங்களைக் காட்டிப் பொது மக்களிடம் நல்ல பிள்ளையாகப் பாசாங்கு செய்கிறது. மற்றப் பிரிவு மக்களிடமிருந்து தனிமைப்பட்டு தொழிற்சங்க இயக்கங்கள் நடத்தப்படுவதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. தொலைபேசி ஊழியர் போராட்டத்திலும் இவ்வாறுதான் செய்தது. கடந்த 8.1.91 அன்று நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய தொழிற்சங்கத் தலைவர்கள் வேலைநிறுத்தத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தனர். உடனே, சென்னை அண்ணாசாலை தபால் துறை தலைமை அதிகாரி அலுவலகத்தின் முன் கூடிய தொழிலாளர்கள், உணர்வோடு ஒற்றுமையாக நடத்திய போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த தொழிற்சங்க துரோகிகளையும் நிர்வாகத்தையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இனியும் இத்துரோக தொழிற்சங்கங்களை நம்புவதில் பயனில்லை. எனவே தகுந்த படிப்பினைகளைப் பெற்று புரட்சிகரமான முறையில் தொழிலாளர் இயக்கம் முன்னேறி வெற்றி பெற வேண்டும்.